OS 106/2023

வா.சா. 1 சொக்கலிங்கம் த/பெ விஸ்வசபாபதி

நாள் 14.03.2025

**குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. அதற்கு முன்பு தறி வேலை செய்து வந்தேன். நான் ஆரணியில் 50 வருடங்களாக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ளது என் கையெழுத்து தான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியும்.

2. நான் எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சொந்தமான சொத்து பராமரிக்க முடியாத காரணத்தினால் ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள். அதனால் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் வாங்கிய தாவா சொத்தின் அசல் கிரையப்பத்திரத்தை தாவாவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது.

3. எவ்வளவு இடத்திற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 20க்கு 66 என்ற அளவிளான சொத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லியுள்ள அளவு வா.சா.ஆ1 கிரையப்பத்திரம் சான்றிட்ட நகலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது செண்ட் கணக்கில் உள்ளது. அவ்வாறு 20 க்கு 66 என்ற அளவின் அடிப்படையில் தான் தாவா சொத்து விவரம் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது. சதுரடி போடவில்லை.

4. தாவா சொத்திற்கான பட்டா என் பெயரில் மாற்றம் செய்யப்படவில்லை. நான் இந்த தாவாவை சர்வே நம்பர்61/2ல் ஏக்கர் 1.78 செண்ட்டில் நான் 2.5 செண்ட் மட்டும் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்து விவரத்தில் சர்வே நம்பர் 61/2AK என்று எதன் அடிப்படையில் சேர்த்துள்ளேன் என்றால் வா.சா.ஆ1 கிரைய பத்திரத்தில் அந்த சர்வே நம்பர் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. பிரதிவாதியின் நற்பெயரை கெடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் சொத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த தாவாவில் நான் வா.சாஆ1 ன் படி கோரியுள்ள 2.5 செண்ட் நிலம் என்பது 1090 சதுரடி என்றும் ஆனால் தாவாவில் 2378 சதுரடி என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ1ன் படி கிரையம் வாங்கியது 1090 சதுரடி என்றும் ஆனால் இந்த தாவாவினை 2378 சதுரடிக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் பத்திரத்தை பார்த்து தான் சொல்லமுடியும்.

6. வா.சா.ஆ1ன் படி 2.5 செண்ட் நிலம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 21.02.1977 தேதியிட்ட பிரதிவாதி தரப்பில் பதிலுரையுடன் தாக்கல் செய்யப்பட்ட கூர் சீட்டின் நகலில் உள்ளது என் கையெழுத்தா என்றால் இல்லை. நான் 21.02.1977 தேதியிலேயே சின்னபையன் என்பவருக்கு தாவா சொத்தினை கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் 21.02.1977 லேயே சின்னபையன் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றும் அன்றிலிருந்து தாவா சொத்தினை சின்னபையன் தான் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

7. மேற்சொன்ன சின்னபையன் 03.05.1982 ல் இறந்துவிட்டார் என்றும் அதன்பிறகு அவரின் வாரிசான கன்னியம்மாள் என்பவர் தாவா சொத்தினை வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கன்னியம்மாள் வீடு கட்டிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கன்னியம்மாள் மின் இணைப்பு பெற்று அந்த வீட்டினை அனுபவித்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. 03.10.1989ல் சர்வே நம்பர் 61/2AK என்று கன்னியம்மாள் பெயரில் பட்டா வழங்கப்பட்டு அந்த சொத்தினை அவர் அனுபவித்து வருகிறார் என்றால் அராஜகமான முறையில் பட்டா பெற்று அனுபவித்து வருகிறார்.

8. அவ்வாறு 03.10.1989 தேதியில் அராஜகமான முறையில் கன்னியம்மாள் பட்டா பெற்றது குறித்து நான் புகார் அல்லது வேறு விதமான சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. அவ்வாறு புகார் அளிக்கவேண்டும் என்ற விவரம் எனக்கு அப்போது தெரியாது. நான் சொல்வது தவறு என்றும் கன்னியம்மாள் தான் தனது பெயரில் பட்டா பெற்று வீட்டு வரி ரசீது மின் கட்டண ரசீது ஆகியவற்றை அவரது பெயரில் பெற்றுள்ளார் என்றும் சொன்னால் கன்னியம்மாள் பெயரில் யுடிஆர் பட்டா வழங்கப்படவில்லை.

9. நான் சொல்வது பொய் என்றும் நான் கடந்த 46 வருடங்களாக தாவா சொத்தின் வழியாக தான் சென்று வருகிறேன் என்றும் அதனால் அங்கு நடந்துள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் எனது சொந்த ஊரான பன்ருட்டிக்கு அடிக்கடி சென்று வருவேன். அவ்வாறு பன்ருட்டிக்கு செல்லும் போது தாவா சொத்தினை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அதனால் தாவா சொத்து வேறு ஒருவர் வீடு கட்டி அனுபவித்து வரும் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

10. 2020ல் ராதாபாய் க/பெ எழிலரசன் என்பவர் தாவா சொத்தினை சர்வேயர் மூலமாக அளந்த போது அவ்வாறு அளக்க கூடாது என்று கிராம நிர்வாக அலுவலரிடம் நான் மனு கொடுத்தேன் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)